**மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 1 - 2023**

---

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 1 இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 செப்தெம்பர் 17 ஆம் திகதிய 3267–எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.06(அ) பிரிவு மற்றும் 3268–எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.03(அ) பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்டிக்கையின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன அமுலாக்கல் முகவர்களாக உள்ளன.

நிகழ்ச்சித்திட்டப் பகுதியில் விவசாயம், குடிநீர் மற்றும் வணிக நோக்கங்களிற்காக நீர் வளங்களை பாதுகாப்பாக அணுகுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். வடமத்திய மாகாண கால்வாய் செயற்திட்டம், வடமேல் மாகாண கால்வாய் செயற்திட்டம், மினிப்பே இடதுகரை கால்வாய் புனரமைப்பு செயற்திட்டம் ஆகிய மூன்று கூறுகளின் கீழ் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 26,720.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 190 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 21,095.37 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 5,625.43 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2015 யூன் 24 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2025 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

நிகழ்ச்சித்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறுகள் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | | | |
| மஹாகிதுல உட்செல்லும் சுரங்கப்பாதையின் நிர்மாணம் | 100 | 2.97 | 2020-2024 காலப்பகுதிக்கான இந்த ஒப்பந்தத்தின் நிர்மாணத்தை ரூபா 9,978.48 மில்லியன் பெறுமதியில் மேற்கொண்ட கம்பனியால், நிர்மாண பணிகளுக்குத் தகுந்த பணியாளர்கள் மற்றும் நிர்மாண உபகரணங்களின் பற்றாக்குறை மற்றும் மோசமான வேலைத் தள முகாமைத்துவம் காரணமாக திட்டமிட்டவாறு நிர்மாண முன்னேற்றத்தை பேண முடியவில்லை. இதன் விளைவாக, ஒப்பந்தம் 2023 மே 26 இல் நிறுத்தப்பட்டது. | இணங்கப்பட்டது. | புதிய ஒப்பந்ததாரரை நியமித்து, மீதமுள்ள நிர்மாணப் பணிகளை, விரைவில் பூர்த்தி செய்ய வேண்டும். |
| வடமேல் மாகாண கால்வாய் செயற்திட்டத்தின் கீழ் 2 மஹகிதுல மற்றும் மகாகிருள நீர்த்தேக்கங்களின் நிர்மாணம் மற்றும் 2 நீர்த்தேக்கங்களுக்கு இடையில் 3.66 கிமீ ஊட்டக் கால்வாயின் நிர்மாணம். | 100 | 1.5 | (i) மஹகிதுல மற்றும் மகாகிருள நீர்த்தேக்கங்களை நிர்மாணிப்பதற்காகவும், மகாதம்பே நீர்த்தேக்கத்தை மேம்படுத்துவதற்காகவும் , மரக் கூட்டுத்தாபனத்தினால் இடையில் உள்ள 778 ஏக்கர் வனப்பகுதியில் 47,552 மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்ட போது, மகாகித்துல நீர்த்தேக்கத்தின் கரையை தயாரிப்பதற்காக 1.5 சதவீத அணையின் பணிகள் அஸ்திவாரம் வெட்டி, களிமண் பதித்து, ரூபா 58.2 | இணங்கப்பட்டது. | ஒரு புதிய ஒப்பந்ததாரர் நியமிக்கப்பட்டு, மீதமுள்ள நிர்மாணம் தொடங்கப்பட்டு, ஒப்பந்தத்தில் செய்யப்பட்ட பணியின் பெறுமதியின் அடிப்படையில் ஆலோசனைக் கட்டணங்களின் கொடுப்பனவை விசாரணை செய்தல். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ரூபா 58.2 மில்லியன் பெறுமதியான வேலையின் நிர்மாண மேற்பார்வைக்கு ரூபா 139 மில்லியன் பதவியணியினரின் சம்பளம், அலுவலக செலவினங்கள் மற்றும் வாகன பராமரிப்புக்காக ஆலோசனை கம்பனிக்கு செலவிடப்பட்டுள்ளது. | | |
| (ii) | ஒப்பந்தத்தின் எஞ்சிய பகுதிகளை பூர்த்தி செய்யும் திட்டங்கள் எதுவும் காணப்படவில்லை, மேலும் மஹாகிதுல நுழைவாயில் சுரங்கப்பாதை மற்றும் அதனுடன் தொடர்புடைய கால்வாய் மாத்திரமே 2024-2027 காலப்பகுதிக்குள் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் ரூபா 2,742 மில்லியன் உள்ளூர் நிதியை பயன்படுத்தி பூர்த்தி செய்யப்பட இருந்தது. 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீட்டில் இருந்து அதற்காக ரூபா 1,000 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ADB நிதியுதவி அல்லது வேறு ஏதேனும் மாற்று நிதியுதவி கிடைக்காத காரணத்தால், மிகுதி பணியை மீண்டும் வழங்குவது தற்போது சாத்தியமில்லை. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நிதிகளை பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட வேண்டும். |

## 2.2 செயற்திட்ட செயற்பாடுகளை பூர்த்தி செய்வதில் தாமதம்

| | கணக்காய்வு விடயம் | பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட திகதி | பூர்த்தி செய்தல் திகதி | தாமதம் ஆண்டு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | வடமேற்கு கால்வாயின் நேபடகஹவத்தையிலிருந்து மஹகிதுல நீர்த்தேக்க நுழைவாயில் சுரங்கப்பாதை வரையிலான 17+050 கிமீ கால்வாயை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தில். 06 காணித்துண்டுகளுக்குப் பெறப்பட்ட இழப்பீடு போதுமானதாக இருக்காததால் இழப்பீட்டு மீளாய்வு சபைக்கு 03 காணி உரிமையாளர்களை | 2018 - 2021 | 2023 திசெம்பர் 05 வரை காலம் நீடிக்கப்பட்டுள்ளது. | 02½ ஆண்டுகள் | காணி சுவீகரிப்பு பணி பூர்த்தியடைந்து நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. | காணி சுவீகரிப்புக்கள் மற்றும் இழப்பீட்டு கொடுப்பனவுகள் ஆகியவை குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அனுப்பி வைத்ததன் காரணமாக 355 மீற்றர் கால்வாயை நிர்மாணிக்க முடியாமல் நீண்ட காலமாக அதற்கான ஒப்பந்தம் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. | | | | | |
| (ஆ) | இந்த தாமதம் காரணமாக, ரூபா 7,226.62 மில்லியனுக்கு (வற் உட்பட) வழங்கப்பட்ட ஒப்பந்தம் ரூபா 15,154.74 மில்லியன் வரை 110 சதவீதமாக இருந்த ரூபா 7,928.12 மில்லியனால் அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டிலிருந்து பொருளாதார மற்றும் நிதி மந்தநிலை காரணமாக நிர்மாணப் பொருட்களின் கிரயம் அதிகரித்ததன் மூலம் ரூபா 162 மில்லியன் அங்கீகரிக்கப்பட்ட விலை வேறுபாடு ரூபா 5,827.7 மில்லியனாக அதிகரித்துள்ளது. | 2018 - 2021 | 2023 திசெம்பர் 05 வரை காலம் நீடிக்கப்பட்டுள்ளது | 02½ | இணங்கப்பட்டது. விலை சீராக்கங்கள் மற்றும் CIDA விலைக் குறியீடுகளுக்கு FIDIC சூத்திரத்தைப் பயன்படுத்தும் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் விலை தளம்பல் செலுத்த வேண்டியிருந்தது. | ஒப்பந்தத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஒப்பந்த காலம் 2023 திசெம்பர் 05 வரை மாத்திரமே நீடிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தம் 2023 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் அத் திகதியில் உள்ளவாறான நிர்மாண முன்னேற்றம் 91.4 சதவீதமாக இருந்தது. | 2018 - 2021 | 2023 திசெம்பர் 05 வரை காலம் நீடிக்கப்பட்டுள்ளது | 02½ ஆண்டுகள் | இணங்கப்பட்டது. ஒப்பந்ததாரர் 2024 செப்தெம்பர் முதல் 2024 திசெம்பர் வரை மோசமான வானிலையால் பாதிக்கப்பட்டுள்ளார், மேலும் 2024 மே 17 வரை கால நீடிப்புக்கான உரித்தை பெற்றுள்ளார். | ஒப்பந்தத்தை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நியமிக்கப்பட்ட செயற்திட்டத்தின் தொழில்நுட்ப உதவியாளர் பின்னர் நிகழ்ச்சித்திட்டத்தின் ஆலோசனை கம்பனியின் சேவையில் இணைந்து 07 வருட காலமாக குழுத் தலைவர் மற்றும் தலைமை வடிவமைப்பு பொறியியலாளராக பணியாற்றியுள்ளார். அதற்காக அவருக்கு யூரோ 26,000 (ரூபா 8.5 மில்லியன்) மாதச் சம்பளம் செலுத்தப்பட்டு, 2023 யூன் அளவில் அவருக்கு சம்பளமாக ரூபா 702.18 மில்லியன் செலுத்தப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் சார்பில் நிகழ்ச்சித்திட்ட தயாரிப்புப் பணிகளில் உதவிய | ஆலோசகரின் பெறுகை செயன்முறை அமைச்சு மற்றும் ADB மூலம் மேற்கொள்ளப்பட்டது. எனவே, பெறுகை ADB வழிகாட்டல்களின் பிரகாரம் இருக்க வேண்டும். ஆலோசனைக் குழுவிற்கான கொடுப்பனவுகள் ஆலோசனை உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தப்படுகின்றன. | செயற்திட்ட மேற்பார்வை சுயாதீனமாக இருக்க வேண்டும். மேலும் ஆட்சேர்ப்புக்கள் ADB வழிகாட்டல்களுக்கு ஏற்ப இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒருவரை, நிகழ்ச்சித்திட்டத்தின் ஆலோசனை நிறுவனத்தில் பணிக்கமர்த்தியதன் மூலம், நிகழ்ச்சித்திட்ட மேற்பார்வையின் சுதந்திரத்திற்கு சவால் விடப்பட்டது. 2013 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வெளியிடப்பட்ட ‘‘ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அதன் கடன்பெறுபவர்களால் ஆலோசகர்களைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள்’’ பந்தி 1.11 இன் அடிப்படையில் இந்த ஆலோசகரின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதும் முரணானதாகும். | | |
| (ஆ) | முன்மொழியப்பட்ட நிர்மாண ஒப்பந்தங்களில் உள்ள சேவைகளின் நோக்கெல்லை, வெளியீடு மற்றும் சேவைகளின் பரப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஆலோசனை கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்படலாம் என்பதால் ஒப்பந்தங்களின் செயலாற்றலின் அடிப்படையில் அவை செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2015 நவம்பர் 16 இலிருந்து 60 மாத காலப்பகுதிக்கு ஐ.அ.டொலர் 22.09 மில்லியன் பெறுமதியான ஆலோசனை ஒப்பந்த உடன்படிக்கை நிகழ்ச்சித்திட்டத்தின் ஆலோசகரிடம் நேர அடிப்படையில் கொடுப்பனவிற்காக கைச்சாத்திடப்பட்டது. செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக செயற்திட்ட காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்ததால் ஆலோசனை ஒப்பந்த உடன்படிக்கை 06 தடவைகள் 2024 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் இந்த நீடிக்கப்பட்ட காலத்தின் அடிப்படையில் ஆலோசனை கட்டணம் செலுத்த வேண்டியதன் மூலம் ஐ.அ.டொலர் 41.56 மில்லியன் வரை கிரயம் அதிகரித்திருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் பகுதி 1 மற்றும் 2 இற்கான ஆலோசனைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு ஐ.அ.டொலர் 25.93 மில்லியன் மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்ததால் விஞ்சிய ஆலோசனைக் கட்டணங்கள் ஏனைய செலவினங்களுக்கான ஒதுக்கீட்டில் இருந்து செலுத்த வேண்டியிருந்தது. | இந்த ஆலோசனை உடன்படிக்கையில் பின்வருவன உள்ளடங்குகின்றன,<br>• பணி சார்ந்த மொத்த தொகை கொடுப்பனவுகள்<br>• நேரம் சார்ந்த நேர அடிப்படையிலான கொடுப்பனவுகள்<br>ஆலோசகரிடமிருந்து தேவைப்படும் சேவைகளின் தன்மையில் தங்கியுள்ளது.<br><br>நேர அடிப்படையிலான சேவைகள், நிர்மாண ஒப்பந்தங்களின் ”பூர்த்தி செய்வதற்கான நேரத்தை” வெளிப்படையாக உணர்கின்றன, எனவே நிர்மாண ஒப்பந்தங்கள் பூர்த்தியடையும் வரை நீடிக்கப்பட வேண்டியிருந்தது.<br><br>ஆலோசனை சேவைகளுக்கான அசல் ஒதுக்கீடு ஐ.அ.டொலர் 22.09 மில்லியன் பகுதி 1 மற்றும் 60 மாத காலத்திற்கு மாத்திரமே இருந்தன. அமுல்ப்படுத்தும் காலத்தில் பல திருத்தங்கள் மற்றும் வேறுபாடுகள் பகுதி 2 பணிகள், நோக்கெல்லை மாற்ற உருப்படிகள் மற்றும் சில வேறுபாடுகளிற்கு அங்கீகரிக்கப்பட்டது. | உடன்படிக்கையின் அடிப்படையில் செலுத்தப்படும் ஆலோசனைக் கட்டணம் மற்றும் அமைச்சரவைப் பத்திரங்களைச் சமர்ப்பித்து ஏனைய நிர்மாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி ஆலோசனைக் கட்டணத்தைச் செலுத்துவதற்குப் பொறுப்பான செயற்திட்ட அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயற்திட்டத்தின் தொடக்கத்தில், 34 வெளிநாட்டவர் ஆலோசனைப் பணிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர், தற்போது 8 வெளிநாட்டவர் பணிபுரிகின்றனர். ஒரு வெளிநாட்டவருக்கு மாதம் ஒன்றுக்கு யூரோ 16,000 முதல் 26,000 வரையான (ரூபா 5.5 மில்லியனில் இருந்து ரூபா 9 மில்லியன் வரை) வீச்சிலான சம்பளமும் ஒரு நாளைக்கு யூரோ 70 முதல் 110 வரை வாழ்வாதார படிகளும் செலுத்தப்பட்டிருந்தன. 2023 யூன் 30 அளவில் இந்த வெளிநாட்டவர்களுக்கு யூரோ 12,843,998 (ரூபா 4,341 மில்லியன்) சம்பளம் மற்றும் யூரோ 1,068,599 (ரூபா 361.18 மில்லியன்) வாழ்வாதார படிகள் செலுத்தப்பட்டுள்ளன. | ஆலோசனை சேவைகளுக்கான கொடுப்பனவுகள் ஆலோசனை உடன்படிக்கையின் பிராகரம் செலுத்தப்படுகின்றன. | (i) குறிப்பிட்ட இடத்தில் நீண்டகாலமாக பணிபுரிந்து மாதாந்த சம்பளம் பெறுபவர்களுக்கு வாழ்வாதார படிகளை செலுத்தாமல் இருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br>(ii) செயற்திட்டத்தை விரைவில் பூர்த்தி செய்வதற்கும், ஆலோசனைக்கான செலவினங்களைக் குறைப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | வெளிநாட்டு ஆலோசனை கம்பனி அதனுடன் இணைந்த 02 உள்ளூர் கம்பனிகளின் மூலம் 161 உள்ளூர் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்திருந்ததுடன் அவர்களில் 110 பேர் தற்போது பணியாற்றி வருகின்றனர். இந்த பதவியணியினருக்கு மேலதிகமாக, கொழும்பு செயற்திட்ட அலுவலகத்தில் பணிபுரியும் 48 பதவியணியினரிற்கும், ஒப்பந்தப் பகுதிகளில் அமைந்துள்ள பணியிட அலுவலகங்களில் பணிபுரியும் 08 பணியாளர்களுக்கும் கால அடிப்படையில் ஆலோசனைக் கட்டணம் செலுத்தப்பட்டு வந்தது. | இணங்கப்படவில்லை.<br>2023 யூன் மாதத்தில் உள்ளவாறு,<br>• கொழும்பு அலுவலகம் - 34 பதவியணி உறுப்பினர்கள்<br>• வேலைத் தளங்கள் - 117 பதவியணி உறுப்பினர்களுக்கு நேர அடிப்படையில் செலுத்தப்பட்டது. | (i) ஆரம்பத்திலிருந்தே ஆலோசனைக்கான செலவைக் குறைக்கும் முறைமையைத் தயாரிக்காததற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொறுப்பாக உள்ளதால், அவர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br>(ii) செயற்திட்டத்தை விரைவில் பூர்த்தி செய்வதற்கும், ஆலோசனைக்கான செலவினங்களைக் குறைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2013 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வெளியிடப்பட்ட ”ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அதன் கடன் பெறுபவர்களால் ஆலோசகர்களைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்களின்” 1.11 (ஆ) மற்றும் (இ) பந்தியின் பிரகாரம் ஆலோசனை ஒப்பந்தத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட கம்பனி அல்லது கம்பனிகள் தொடர்புடைய செயற்திட்டத்துடன் | இந்த இரண்டு பணிகள் காலவரிசையின் இரண்டு வெவ்வேறு காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன, எனவே பரஸ்பரம் பிரத்தியேகமாக கருதப்படலாம்.<br>• ஆலோசகர் தெரிவு அமைச்சால் ADB உடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டல்களுக்கு முரணாக இருப்பதால், ஆலோசகர்களைத் தெரிவுசெய்யும் இந்த முறைசாரா முறைகள் உடனடியாக நிறுத்தப்பட்டு, ஆசிய |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்புடைய ஏனைய ஒப்பந்தங்களை (உதாரணம் - வடிவமைப்புத் திட்டங்களைத் தயாரித்தல், சுற்றாடல் மதிப்பீடுகள்) மேற்கொள்ளக் கூடாது. அந்த கம்பனிகள் முன்னரே செய்திருந்தால் அந்த கம்பனிகளை மீண்டும் ஆலோசனைக்காக நியமிக்கக் கூடாது, மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் கடன் பெற்றவர்களுடன் (நீர்ப்பாசன அமைச்சு) குடும்பம் மற்றும் வணிக உறவுகளைக் கொண்டவர்களும் ஆலோசனைக்கு பங்களிக்கக்கூடாது. எனினும், 2015 ஆம் ஆண்டு முதல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் வடமத்திய மற்றும் வடமேற்கு கால்வாய்கள் மற்றும் மினிபே கால்வாய் புனரமைப்பு செயற்திட்டங்களிற்கான வடிவமைப்புத் திட்டங்கள், சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைகள், சாத்தியவள ஆய்வு அறிக்கைகள் மற்றும் மாற்றியமைக்கும் அறிக்கைகளை தயாரிப்பதற்காக இன்போரெக் IDEAS கம்பனி மகாவலி ஆலோசனைப் பணியக கம்பனியின் மூலம் ரூபா 102.98 மில்லியன் தொகையை பெற்றுள்ளது. மேலும், இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான ஆலோசகராக இருந்த டிராக்டபிள் (Tractabl) இலங்கைப் பிரதிநிதி கம்பனியாகப் பணிபுரிந்து வருகிறது, இந்த கம்பனியின் பிரதான பதவியணியினர் கடன்பெறுபவரின் நீர்ப்பாசன அமைச்சின் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் அதன் துணை நிறுவனங்களை கொண்டுள்ளது. | | அபிவிருத்தி வங்கி வழங்கிய வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும். |
| (ஊ) | ஒப்பந்ததாரர், ஆலோசனை கம்பனி மற்றும் ஆலோசனை கம்பனியின் சிற்றுண்டிச்சாலை பயன்பாட்டிற்காக அமனோ ஷீட்களை (Amano sheets) பயன்படுத்தி தற்காலிக கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 41.59 மில்லியன், ரூபா 18.32 மில்லியன் மற்றும் ரூபா 7.4 மில்லியன் செலுத்தப்பட்டது. ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்ட பின்னர் கட்டிடங்கள் செயற்திட்டத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. எனினும், ஒப்பந்ததாரர் பயன்படுத்திய கட்டிடங்களில் பொருத்தப்பட்டிருந்த குளிரூட்டிகள் அனைத்தும் அகற்றப்பட்டு ஒப்படைக்கப்பட்டன. | ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், அணிதிரட்டப்படத சந்தர்ப்பத்தில் பொருத்துக்கள் மற்றும் பொருத்துதல்களுடன் சேர்த்து அத்தகைய தற்காலிக வசதிகள் அனைத்தும் ஒப்பந்ததாரரால் மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக அகற்றப்படும். | கையகப்படுத்தப்பட்ட தற்காலிக கட்டிடங்கள் ஒரு சுதந்திரமான தரப்பினரால் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். மேலும் ஏதேனும் மேலதிக கொடுப்பனவு இருந்தால், ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

## 2.4 செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட வழமைக்கு மாறான செயற்பாடுகள்/ கொடுப்பனவுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| இந்த ஒப்பந்தத்தின் கீழ், நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான தேவகுவ பொறியியல் அலுவலகத்தை பழுதுபார்ப்பதற்கும், நவீனமயப்படுத்துவதற்கும் ரூபா 10 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதனை நிறைவேற்றாமல், செயற்திட்டத்தின் ஆலோசனை கம்பனிக்கு ரூபா 9.6 மில்லியன் செலவிடுவதன் மூலம் இரண்டு மாடி வீடு வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தது. | எனினும், ஒப்பந்தத்தின் ஆரம்ப கட்டத்தில், தேவகுவ நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டிடம் புனரமைப்பிற்காக பரிசோதிக்கப்பட்டதுடன் அது பழுதுபார்க்கும் நிலையில் இல்லாததால் மிகக் குறுகிய காலப்பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட விருப்பம், செயற்திட்டத்திற்காக மிகவும் மையமாக அமைந்துள்ள கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து வதிவிட பொறியியலாளர் அலுவலகத்தை நிறுவுவதாகும். | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மினிப்பே அணைக்கட்டை உயரமாக்குவதற்கான ஒப்பந்தத்தின் இடதுகரை மற்றும் வலதுகரை கால்வாய்க்கான நீர் கட்டுப்பாடு மற்றும் அளவீட்டு வசதிகள் உட்பட வெளிநாட்டு கம்பனிக்கு 2018 சனவரி 05 இல் ரூபா 1,864.80 மில்லியன் (வரி இல்லாமல்) பெறுமதியில் வழங்கப்பட்டிருந்ததுடன் அது 2020 நவம்பர் 12 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், பல்வேறு காரணங்களால் ஒப்பந்த காலம் 2021 யூலை 31 வரை 243 நாட்களுக்கு நீடிக்கப்பட்டிருந்தது. முன்மொழியப்பட்ட மினிப்பே அணைக்கட்டின் மையத்தில் கசடு அகற்றும் வாயிலை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அது நடைமுறைச் சிக்கல்களை ஏற்படுத்தக் கூடும் என்பதை உணர்ந்ததன் பின்னர், வாயிலின் செயற்பாடு மற்றும் பராமரிப்பில் அது அகற்றப்பட்டிருந்தது. அந்த நடவடிக்கைகளை நீக்குவதற்கு 134 நாட்கள் அவகாசம் அளிக்கப்பட்டது சர்ச்சைக்குரிய விடயமாக மாறியிருந்தது. | இது தொழிற்பாட்டு மற்றும் செயற்பாட்டு வசதிக்காக கேள்வி வடிவமைப்பில் மேற்கொள்ளப்பட்ட அடுத்தடுத்த முன்னேற்றத்தின் விளைவாகும். முக்கிய பங்குதாரர்களைக் கொண்ட தொழில்நுட்ப மீளாய்வுக் குழுவின் முழுமையான ஆய்வுக்குப் பின்னர், முன்மொழியப்பட்ட நடுத்தர வண்டல் வெளியேற்றி (silt ejector) இடமாற்றம் செய்யப்பட்டது. இதனால் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒப்பந்ததாரர்களின் கால அவகாசம் நீடிக்கப்பட்டது. | அனைத்து தொடர்புடைய காரணிகளையும் கருத்தில் கொண்ட பின்னரே திட்டமிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேற்படி ஒப்பந்தமானது கிட்டத்தட்ட 02 வருடங்களாக நீடிப்பு இல்லாமலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இந்தக் காலப்பகுதியில் ஒப்பந்தத்தின் நிர்மாண முன்னேற்றம் 22 வீதமாக இருந்தது. 2023 யூன் 05 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், இந்த ஒப்பந்தத்தின் பெறுமதியை ரூபா 2,912.85 மில்லியன் வரை அதிகரிப்பதற்கும், அதே ஒப்பந்ததாரால் மீதமுள்ள பணிகளைச் செய்வதற்கு திருத்தப்பட்ட உடன்படிக்கை இல. 02 இல் கைச்சாத்திடுவதற்கும் ஒப்பந்த காலத்தை 2023 செப்தெம்பர் 21 வரை நீடிப்பதற்கும் முடிவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த பெறுமதி திருத்தப்பட்ட உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 1,048.05 மில்லியன் அதிகரித்த ஒப்பந்த பெறுமதியில் ரூபா 996.10 மில்லியன் போன்ற விலை வேறுபாட்டிற்கு அதிக பெறுமதி இருந்தது. | ஒப்பந்த நிபந்தனைகளின் சில உட்பிரிவுகளை மாத்திரம் திருத்துவதற்காக ஒப்பந்த உடன்படிக்கையில் திருத்தம் செய்யப்பட்டது. அசல் ஒப்பந்த உடன்படிக்கையின் ஏனைய அனைத்து நிபந்தனைகளும் முக்கிய உடன்படிக்கையின் பிரகாரம் இன்னும் நடைமுறையில் உள்ளன. அசல் உடன்படிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத் தொகையானது பணிகளை நிறைவேற்றுவதற்கும் பூர்த்தி செய்வதற்கும் மற்றும் ஏதேனும் குறைபாடுகளை (1.1.4.1 ஆம் உட்பிரிவு) நிவர்த்தி செய்வதற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடிதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையை கருதுகிறது. எனினும், ஒப்பந்த விலையானது 14.1 ஆம் உட்பிரிவில் வரையறுக்கப்பட்ட விலையைக் குறிக்கிறதுடன் ஒப்பந்தத்தின் பிரகாரம் சீராக்கங்களை உள்ளடக்குகிறது, இது ஒவ்வொரு திருத்தத்திலும் ஆவணப்படுத்தப்பட வேண்டிய அவசியமில்லை. | (i) ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் சரியாக திட்டமிடாததற்கு காரணமான செயற்திட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br>(ii) ஒப்பந்த உடன்படிக்கைகள் கவனமாக தயாரிக்கப்பட்டு, கையொப்பமிடுவதற்கு முன்னர் தேவையான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கியிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.<br>(iii) நிர்மாணத்தை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வடமத்திய மாகாண பெரிய கால்வாய் செயற்திட்டத்தின் கீழ் மொரகஹகந்த நீர்த்தேக்கத்திலிருந்து 6.225 கிலோமீற்றர் நீளத்திற்கு கால்வாய் அமைப்பதற்கான ஒப்பந்தம் 2016 முதல் 2020 வரையான காலப்பகுதியில் உள்ளூர் ஒப்பந்ததாரருக்கு ரூபா 3,254.29 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. 2021 மே 31 வரையிலும் நிர்மாணத்தின் முன்னேற்றம் 64 சதவீதம் மாத்திரமே ஆகும், மேலும் ஒப்பந்ததாரரின் நிதி நெருக்கடி காரணமாக வேலையை பூர்த்தி செய்ய முடியவில்லை. ஒப்பந்தம் தொடர முடியாததால் 2021 யூலை 13 இல் இரத்து செய்யப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்ததாரர் வங்கியில் வைத்திருக்கும் முற்பணங்கள் மற்றும் செயலாற்றல் உத்தரவாதங்கள் ஆகியவற்றிலிருந்து நட்டங்களை அறவிடுவதை தடுக்கும் வகையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், ஒப்பந்ததாரரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா | ஒப்பந்தம் ”இரத்து செய்யப்படவில்லை” ஆனால் ”நிறுத்தப்பட்டது” இது தொடர்பான நீதிமன்ற வழக்கு, சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, முடிவுக்காக காத்திருக்கிறது. | மீதமுள்ள நிர்மாணம் மற்றும் ஒப்பந்தத்தின் முடிக்கப்படாத பகுதிகளின் விரைவான நிர்மாணம் மற்றொரு ஒப்பந்ததாரர் மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 185.89 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் மற்றும் ரூபா 390.51 மில்லியன் பெறுமதியான செயலாற்றல் பிணையை அறவிட முடியவில்லை. | | |
| (ஈ) | இலங்கை அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையிலான கடன் உடன்படிக்கைகள் பகுதி - 03 இற்கு இன்னும் கைச்சாத்திடப்படவில்லை, மேலும் 2019-2023 காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்படவுள்ள வடமேற்கு கால்வாய் செயற்திட்டத்தின் 03 பிரதான ஒப்பந்தங்கள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. ADB நிதியுதவி அல்லது வேறு ஏதேனும் மாற்று நிதியுதவி கிடைக்காத காரணத்தால், மிகுதி பணியை மீண்டும் வழங்குவது தற்போது சாத்தியமில்லை. | பொருத்தமான வரிசை அமைச்சு மற்றும் திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு, வடமேற்கு கால்வாய் செயற்திட்டத்தின் மீதமுள்ள நிர்மாணத்தை மேற்கொள்ளுதல். |

**2.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2016 முதல் 2023 வரையிலான காலப்பகுதியில் ஒதுக்கப்பட்ட நிதியை குறைவாகப் பயன்படுத்தியதால், இந்நிகழ்ச்சித்திட்டம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 117.14 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணத்தை செலுத்தியிருந்தது. | காணி சுவீகரிப்புக்களில் தாமதம், தண்ணீர் பிரச்சனைகள், மோசமான வானிலை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட்-19 நிலைமை மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி போன்ற பல்வேறு காரணங்களால் செயற்திட்ட செயலாற்றல் மெதுவாக இருந்தது. எனவே கடன் திட்டமிடப்பட்டு பயன்படுத்தப்படவில்லை, அதிக கடப்பாட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. | திட்டத்திற்கு ஏற்ப வலுவான நிதிக் கட்டுப்பாடு மற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |